# Saath

WRAPAROUND
SERVICE
RESPONSE

**Saath (சாத் ) இன்**
**ஒன்றிணைந்து பதிலளிக்கும் சேவை**

தெற்காசியக் குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்களுக்குக் கலாச்சார ரீதியாக ஒன்றிணைந்த சேவைகள்

இந்த நாட்டில், கலாச்சார ரீதியாக மிகவும் வேறுபட்டவர்கள் வாழும் பகுதிகளில் Peel ஒன்றாகும். அத்துடன் Peel CAS எமது பிராந்தியத்தில் உள்ள குடும்பங்களின் தனித்துவமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உறுதி பூண்டுள்ளது. இனப்பாகுபாடு-அற்ற, அடக்குமுறை-அற்ற மற்றும் கலாச்சாரத்தை மதிக்கும் சேவையைப் பிள்ளைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்கள் யாவரும் பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதற்காக, கலாச்சார ரீதியில் அமைந்த திறமையான சேவை மாதிரிகளை, உள்ளூர் சமூகம் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து நாம் உருவாக்கியுள்ளோம்.

இனப் பாகுபாட்டுக்கு உள்ளாகிய இளைஞர்கள் மற்றும் குடும்பங்கள் அனுபவிக்கும் கலாச்சார ரீதியான தடைகள் மற்றும் ஒடுக்கு முறையை இந்த சேவைகள் கண்டுணர்ந்து, கலாச்சார உணர்வுகள் மற்றும் மேம்பட்ட சமூகக் கூட்டாண்மை மூலம் அவற்றை நிவர்த்தி செய்ய உதவுகின்றன.

## இது எப்படிச் செயற்படுகின்றது?

தெற்காசிய சமூகத்தின் தனித்துவமான தொலைநோக்குகள் மற்றும் அனுபவங்களைக் கருத்திற் கொண்ட கலாச்சார மைய அணுகுமுறை ஒன்றை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, Indus சமூக சேவைகளுடன் இணைந்து Saath ( சாத் ) இன் ஒன்றிணைந்து பதிலளிக்கும் சேவைத் திட்டத்தை உருவாக்க Peel CAS ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

Saath ( சாத் ) மூலம் பயனடையக்கூடிய ஒரு குடும்பத்துடன் Peel CAS இணைந்து செயற்படும் போது, ஒருங்கிணைக்கும் பணியாளர் என அறியப்படும், கலாச்சார உதவியாளர் ஒருவருடன் தொடர்பு கொள்வதற்காக எமது குழுக்கள் (பீல் சி எ ஸ் (Peel CAS)) இன்டாஸ் (Indus) Indus ஐ அணுகுகின்றனர். இந்தப் பணியாளர் தெற்காசிய சமூகங்களுடன் வலுவான தொடர்புகள் உள்ளவர் அத்துடன் அவர்களின் மொழிகள், மதங்கள், மரபுகள் மற்றும் கலாச்சார நடைமுறைகளை நன்கு அறிந்தவர். இனப்பாகுபாடு-அற்ற, சமத்துவத்தின் அடிப்படையில் வேரூன்றிய, கலாச்சார ரீதியாக மதிக்கப்படும் சேவைகளை ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் பெற்றுக் கொள்வதை அவர்கள் உறுதி செய்கின்றனர். பன்முகத்தன்மையைக் கொண்டாடும் ஒரு ஆதரவு அமைப்பாகப் பிள்ளைகள், இளைஞர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கது நாம் ஒன்றாகச் சேவை செய்து வருகின்றோம்.

## பயனாளியின் நற்சான்றுகள்

“என்னுடைய தெற்காசிய சமூகத்தைச் சேர்ந்த ஒருவரின் ஆதரவு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அந்தப் பணியாளர் இந்தி மொழியில் எனக்கு உதவி புரிந்தார், அவருடைய கனிவான மற்றும் நேர்மையான வார்த்தைகள் உடனடியாகவே என் மனதை ஆறுதல் உதவின.”

"கலாச்சார ஒருங்கிணைப்பாளர் எனக்கு ஒரு நண்பரைப் போன்றவர், பிள்ளைகளின் பாதுகாப்பு குறித்த கரிசனைகளுக்குப் பதிலளிக்க வேண்டியிருக்கும் போது நான் சார்ந்து இருக்கக்கூடிய ஒருவர்."



"Saath கலாச்சார ஒருங்கிணைப்பாளர் மற்றும் Peel CAS பணியாளர் ஆகியோரின் உதவியுடன், எனது பிள்ளையின் கலாச்சார அடையாளம் காரணமாக அவரின் போராட்டத்தை என்னால் புரிந்து கொள்ள முடிந்ததுடன் அவர் பாதுகாப்பாக இருப்பதை உணர்த்துவதற்கும் என்னால் உதவக்கூடியதாக இருந்தது."

*Saath* என்றால் *ஒருமித்து* எனப் பல இந்திய மொழிகளில் பொருள்படும்.

Peel CAS● 25 Capston Drive, Mississauga, Ontario, L5W 0H3 ● 905-363-6131 ● 888-700-0996 ● www.peelcas.org

## இதன் நன்மைகள் என்ன?

தெற்காசிய சமூகம் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களைப் புரிந்துகொள்ளும் சேவை வழங்குநர்களிடமிருந்து அவர்களின் குறிப்பிட்ட சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமான சேவைகளைப் பெற்றுக்கொள்ள Saath வழிவகுக்கின்றது. சிக்கலான சேவை அமைப்பு முறைமைகளினூடாகக் குடும்பத்தை வழிநடத்தவும், அவர்களின் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான சேவை மற்றும் வளங்களுடன் அவர்களை இணைக்கவும் இந்த ஒருங்கிணைப்புப் பணியாளர் உதவ முடியும்.

குடும்பத்தின் தனித்துவமான நடவடிக்கைகளைத் திறம்படப் புரிந்துகொள்வதற்கும், கலாச்சாரத்தை மதிக்கும் வகையில் ஆதரவுக்கான சேவைகளை வழங்குவதற்கும் குடும்பங்களுடன் இணைந்து நாம் பணியாற்றுகின்றோம்.

Peel CAS Indus Community Services

## என்ன வகையான சேவைகள் இங்கு கிடைக்கின்றன?

பல்வேறு கலாச்சாரங்களை மையமாகக் கொண்ட பின்வரும் சேவைகள் மற்றும் வளங்களை Saath வழங்குகின்றது:

தெற்காசியருக்கே உரித்தான சிறந்த நடைமுறைகளான தெற்காசியப் பெற்றோரியம் மற்றும் இணையத்தள ஆதரவைப் பயன்படுத்துவதை உறுதிசெய்வதற்கு CAS பணியாளர் மற்றும் Saath ஆலோசகருடன் கூட்டாகப் பயணித்தல்

உணர்ச்சி சம்பந்தமான சுகாதார சேவையின் ஆதரவை சமூகப் பங்காளர்கள் மூலம் இலகுவாக்குதல்

வேலைவாய்ப்பு, வீட்டுவசதி, கல்வி மற்றும் சிறுவர் பராமரிப்புக்கான அணுகல்

## மேலதிகத் தகவல்களுக்கு

உங்கள் Peel CAS பணியாளரைக் தொடர்பு கொள்ளவும் அல்லது 905-363-6131 இணைப்பு 3045 அல்லது MJohn@peelcas.org MJohn@peelcas.org இல் எமது பயனாளர் சேவை மற்றும் ஆதரவுக் குழுவைத் தொடர்பு கொள்ளவும். Saath மற்றும் பிற கலாச்சாரத் தகுதி வாய்ந்த சேவை மாதிரிகள் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்குப் பார்வையிடவும்www.peelcas.org இந்த ஆவணத்தை வேறொரு மொழியில் கோருவதற்குத் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்communications@peelcas.org

Saath இன் ஒன்றிணைந்து பதிலளிக்கும் சேவை என்பதுPeel Children's Aid Society மற்றும் Indus Community Services இடையேயான ஒரு கூட்டமைப்பு ஆகும்.

Saath இன் ஒன்றிணைந்து பதிலளிக்கும் சேவைக்கான பரிந்துரைகள் குடும்பத்தின் ஒப்புதலின் மூலம் செய்யப்படும்.



